**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| THE COURT OF | : | II ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THANJAVUR. |
| Case No | : | SC 73/2020 |
| Prosecution Witness | : | PW 12 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராஜேந்திரன் | Caste | : | |
| Father's Name | : | நடேசன் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | 64 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 01.12.2023**

***எதிரிகள் 1, 2, 6, 9, 11 வருகை***

***எதிரி 3, 4, 5, 7, 8, 10 வருகை இல்லை குவிமுச பிரிவு 317 கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.***

**அரசு தரப்பில் முதல் விசாரணை :-**

நான் மணலூர் சாஸ்திரி நகரில் வசித்து வருகிறேன். 4 வருடங்களுக்கு முன்பு ஜீன் மாதம் 14 ஆம் தேதி நான் கண்டியூரில் நின்றுகொண்டிருந்த போது சுரேந்திரன், வெங்கடேசன், முருகராஜ், பாரதி மற்றும் ஒருவர் ஆகியோரை போலிஸார் விசாரித்து கொண்டிருந்தார்கள். எதிரிகள் போலிஸாரிடம் கட்டையால் அடித்ததாக சொன்னார்கள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து கொண்டிருந்தார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னிடம் சாட்சி கையொப்பம் வாங்கிகொண்டார்கள். என்னுடன் சந்திரகாசன் என்பவரும் கையெழுத்து போட்டார். 1 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள என்னுடைய கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.2**. 2 வது எதிரி சுரேந்திரனின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள என்னுடைய கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.3**. 3 வது எதிரி தினேஷின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள என்னுடைய கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.4**. 7 வது எதிரி பாரதியின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள என்னுடைய கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.5**. 14.06.2019 ஆம் தேதியன்று காலை 10 மணிக்கு தயாரிக்கப்பட்ட கைபற்றுதல் மகசரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையதுதான் அது **அ.சா.ஆ.6**. 12 மணிக்கு தயாரிக்கப்பட்ட கைபற்றுதல் மகசரில் உள்ள என்னுடைய கையொப்பம் **அ.சா.ஆ.7**.

**அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள்படி பகுதியாக பிறழ் சாட்சியாக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்குவிசாரணை**

14.06.2019 காலை 9 1/2 லிருந்து 10 மணிக்குள் ஈச்சங்குடி காளியம்மன் கோவில் தெருவில் போலிஸார் இரும்பு பைப்பை

கைபற்றினார்கள் என்றால் ஆமாம். போலிஸார் என்னை ஈச்சங்குடிக்கு அழைத்து சென்றார்கள். அ.சா.ஆ.6 கையொப்பத்தை ஈச்சங்குடியில் இரும்பு பைப்பை கைபற்றியதற்கு சாட்சியாகதான் என்னிடம் அ.சா.ஆ.6 கையொப்பம் வாங்கினார்கள் என்றால் ஆமாம். 14.06.2019 மதியம் 12 மணிக்கு திருவையாறு மெர்சியா நகர் பாரதியின் மாமனார் வீட்டு முன்பு இண்டிகா காரை போலிஸார் என் முன்னிலையில் கைபற்றினார்கள் என்றும், சொன்னால் சரிதான். அது சில்வர் கலர் கார்.போலிஸார் என்னை பாரதி மாமனார் வீட்டுக்கு அழைத்து சென்றார்களா என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் இரும்பு பைப் தான் போலிஸார் என்முன்னிலையில் கைபற்றியது அது **சா.பொ.1**. என்னிடம் காட்டப்படும் நிழற்படத்தில் உள்ள கார்தான் என்முன்னிலையில் கைபற்றப்பட்டது அந்த நிழற்படங்கள் 4 எண்ணிக்கை **சா.பொ.2**. எனக்கு வயது முதிர்வினாலும், ஞாபகமறதியானாலும் முதல்விசாரணையில் என்னால் சொல்லமுடியவில்லை என்றால் ஆமாம்.

**1 முதல் 6 மற்றும் 8 முதல் 11 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

பொதுவாக எனக்கு எதை பார்த்தாலும் பயமாக இருக்கிறதா என்றால் ஆமாம். எந்த கையெழுத்தை யாருக்காக போட்டேன் என்று குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான். போலிஸார் என்னை கண்டியூரில் அழைத்தார்கள். போலிஸார் என்முன்னிலையில் எதிரிகளிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றும், அதனால்தான் யார்யாருடைய ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து போட்டேன் என்று என்னால் சொல்லமுடியவில்லை என்றால் சரியல்ல. போலிஸாருக்கு பயந்துகொண்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தை ஒரு போலிஸார் எழுதினார். காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட ஆவணங்களில் கையெழுத்திட்டுள்ளேன் என்றால் சரியல்ல. யார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் சா.பொ.1, 2 கைபற்றப்பட்டது என்று குறிப்பிட்டு என்னால் சொல்லமுடியாது என்றால் ஆமாம். ஒப்புதல் வாக்குமூலம் பெற்று கைபற்றுதல்கள் எல்லாம் முடிப்பதற்கு சுமார் 8 மணிநேரம் ஆகியிருக்கும். போலிஸார் என்முன்னிலையில் தடயபொருட்கள் எதையும் கைபற்றவில்லை என்றும், போலிஸாருக்கு பயந்துகொண்டு போலிஸார் நீட்டிய ஆவணங்களில் கையெழுத்திட்டேன் என்றால் சரியல்ல.

**7 ஆம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

எதிரி பாரதி இன்று நீதிமன்றத்திற்கு ஆஜராகியிருந்தார் நடுவில் ஊதா கலர் சட்டை அணிந்திருப்பவர் பாரதி (சாட்சி எதிரி தமிழ்செல்வனை பாரதி என அடையாளம் காட்டியுள்ளார்). போட்டோவில் காட்டிய கார் மாதிரி சில்வர்கலரில் இருந்தது காரின் பதிவு எண் எனக்கு ஞாபகமில்லை.

திருவையாறு காவல்நிலையம் உள்ள ரோட்டில் அந்த சில்வர் கலர் கார் நின்று கொண்டிருந்தது. போலிஸார் அந்த காரை எனக்கு காட்டினார்கள். 5 கையெழுத்துக்களையும் திருவையாறு காவல்நிலையத்தில் போட்டேனா என்றால் ஆமாம். நான் கையெழுத்து போடும்போது அந்த தாளில் எழுதப்பட்டு இருந்தது. அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று நான் படிக்கவில்லை. காவல்நிலையத்தில் மேற்சொன்ன 5 பேரையும் பார்த்தேன். போலிஸார் கேட்டுகொண்டபடி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- A. மலர்விழி)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.